# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

ஆணை எண்: 383 /பேரூ/2025
நாள் : 22.04.2026

G. சாமிநாதன்,
திருப்பனந்தாள்,
தஞ்சாவூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருப்பனந்தாள் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள், மட்டியூர் அஞ்சல், 35/4 பட்டம் கிராமம், எண். 14A, மாரியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. G. சாமிநாதன் என்பவரது 10.11.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.11.2025 அன்று பெறப்பட்டு, 383/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள், மட்டியூர் அஞ்சல், 35/4 பட்டம் கிராமம், எண். 14A, மாரியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. G. சாமிநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது 10.11.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"Subject -1 Complaint under Section 2 of the Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014.

'wilful failure in taking action' or 'omission to act' (மனுதாரரான எனது வேண்டுகோள் மனுக்கள் சார்ந்து நடவடிக்கை எடுப்பதில் இருந்து உயர்திரு செயல் அலுவலர் அவர்கள் அவருடைய துறை சார்ந்த அலுவல் ரீதியான செயல்களை செய்ய தவறி இருக்கிறார்கள்.)

2. To 'cause undue harm' or 'hardship' to any other person (பொது மக்கள் மற்றும் வாகன போக்குவரத்து பயனாளிகள் நலன் கொண்ட மனுதாரருடைய நியாயமான

வேண்டுகோள்களை கவனத்தில் கொள்ளாமல் இருந்ததனால் உயர்திரு செயல் அலுவலர் அவர்கள் மனுதாரருக்கு எல்லையற்ற தீங்கு மற்றும் சிரமத்தை விளைவித்துள்ளார்கள்.)

3.was actuated in the discharge of his functions such as 'improper' (உயர்திரு செயல் அலுவலர் அவர்கள் அலுவல் முறைகளற்ற செயல் பணிகளை மனுதாரருடைய வேண்டுகோள்களுக்கு எதிராக செயல்பட்டிருக்கிறார்கள்.)

4.The guilty of 'lack of integrity' (மனுதாரருடைய நியாயமான வேண்டுகோள்களுக்கு துரித விசாரணை மற்றும் நடவடிக்கை மேற்கொள்ளாமல் காலத்தை கடத்தி உயர்திரு செயல் அலுவலர் அவர்கள் அலுவல் ரீதியாக நேர்மை குறைபாடுடையவராக செயல்பட்டுள்ளார்கள்.)

5.Is guilty of any action as public servant which 'causes to make loss of my residential properties assets" (மனுதாரர் திருப்பனந்தாள் பேரூராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டில் வசிக்கும் பயனாளர் ஆவார். மனுதாரர் நியாயமான வேண்டுகோள்கள் சார்ந்தும் மற்றும் அதன் தொடர்புடைய ஆவணங்கள் சார்ந்தும் உயர்திரு செயல் அலுவலர் அவர்கள் அலுவலக ரீதியான தானாக கடைபிடிக்க வேண்டியதான பொறுப்புகள், நேர்மை விதிமுறைகள் மற்றும் கடமை நடத்தைக்கு இணங்கிய வகையில் உயர்திரு செயல் அலுவலர் அவர்கள் செயல்பட தவறியதால் மனுதாரராகிய எனது வீட்டு குடியிருப்பு மனையில் பெருத்த இழப்பு (காலம், நேரம், பணம் மற்றும் உழைப்பு) ஏற்பட காரணமாக இருந்துள்ளார்கள்.)

6.Has 'abused his position' (உயர்திரு க. செந்தில்குமார் அவர்கள் (செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், திருப்பனந்தாள், திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்) மனுதாரர் வேண்டுகோள்களுக்கு எதிராக தனது அதிகாரத்தை தவறான முறையில் பயன்படுத்தி 07.02.2025ஆம் தேதி அன்று தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து மனுதாரராகிய எனக்கு சொந்தமான வீட்டு குடியிருப்பு மனையில் தனி நபர்களுடன் அத்துமீறி உள்ளே நுழைந்து (Criminal Trespass) பொருட்களை சேதபடுத்தி (Damage Properties) கிரிமினல் குற்ற செயல்களை செய்துள்ளார்கள்.)

<u>Subject 2</u>

மேற்காணப்பட்டுள்ள பொருள் 1 வரிசை எண் 5 மற்றும் 6-ல் (Subject 1 Serial Number 5 and 6) எனது புகார் மனுவில் (MUG25069346 தேதி 07.02.2025) தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி 1) உயர்திரு க. செந்தில்குமார், செயல் அலுவலர் அவர்கள் 2) திரு. ஸ்டாலின் அவர்கள், திருப்பனந்தாள் (தனி நபர் ஆவார்), 3) திரு. சு. சடையப்பன் அவர்கள் (தனி நபர் ஆவார்) பட்டம் கிராமம் மற்றும் 4) திரு. ப. ஐயப்பன் அவர்கள், (தனி நபர் ஆவார்) (பட்டம் கிராமம்) ஆகியோர்களுடன் இணைந்து 07.02.2025ஆம் தேதி உயர்திரு செயல் அலுவலர் அவர்கள் தனது அலுவல் அதிகாரத்தை தவறான முறையில் துஷ்பிரயோகம் செய்து எனது குடியிருப்பு வீட்டு மனையில் அத்துமீறி உள்ளே நுழைந்து (Criminal Trespass) மற்றும் அரசு வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் (கட்டுமானம்) கட்டப்பட்டு வந்த கான்கிரீட் காம்பவுண்ட் சுவர் காலங்களை சேதப்படுத்தியது, பொருட்களை சேதப்படுத்தியது (Damage the Properties) தொடர்பாக உயர்திரு மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலர் அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களுக்கு சம்பவம் தொடர்பான ஆவண ஆதாரங்களுடன் அளிக்கப்பட்டுள்ள புகார் மனு, தேதி 14.02.2025 சார்ந்தது.

<u>Subject – 3</u>

மேற்காணப்பட்டுள்ள பொருள் – 2 (Subject 2) சார்ந்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் 22.08.2025 என்ற தேதியிட்டு உயர்திரு பொது தகவல் அலுவலர் அவர்கள் (உயர்திரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள்), மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களிடம் தகவல் கோரப்பட்டதற்கு 23.09.2025 தேதியிட்டு வழங்கப்பட்டுள்ள (C.No. 1043/RTI/ADSP/HQ/2025 நாள் 17.09.2025) பதிலறிக்கை.

Subject 4: உயர்திரு உதவி இயக்குநர் அவர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம், மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள குறிப்பாணைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும்

Subject 5: தொடர்புடைய ஆவணங்கள் உயர்திரு சமூகம் செயலாளர் அவர்கள், உயர்மிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்கள் விசாரணைக்கு அழைக்கும் போது எனது வேண்டுகோள்கள், கடிதங்கள் மற்றும் விசாரணை தொடர்புடைய ஆவணங்கள்.

அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகின்றேன். பணி நிமித்தம் காரணமாக வெளியூரில் எனது குடும்பத்தாருடன் தங்கியுள்ளேன். மேலும் உயர்திரு க. செந்தில்குமார், செயல் அலுவலர் அவர்கள் மீது Subject 2ல் தெரிவிக்கப்பட்டுள்ள புகார் மனுவை உயர்திரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவின்படியும், அதை தொடர்ந்து Subject 3ன்படி உயர்திரு பொது தகவல் அலுவலர் அவர்கள் (உயர்திரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள்), மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்கள் வழங்கியுள்ள பதிலறிக்கையில் " மனுதாரர் அனுப்பிய புகார் மனு தொடர்பாக விசாரணை செய்து நிலம் மற்றும் இடம் தொடர்பாக பிரச்சனையாக இருப்பதால் சம்பந்தப்பட்ட துறை மற்றும் நீதிமன்றம் மூலம் தீர்த்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்ற பதிலை சான்றளிக்கப்பட்ட தகவலாக வழங்கியுள்ளார்கள்.

ஆகவே, பதிலறிக்கையில் வழங்கப்பட்டுள்ள "நிலம் மற்றும் இடம் தொடர்பாக பிரச்சனையாக இருப்பதால்" என்ற தகவல் திருப்திகரமாக இல்லை, காரணம், எனது புகார் மனு திரு. க. செந்தில்குமார் அவர்கள், உயர்திரு செயல் அலுவலர் (திருப்பனந்தாள் பேரூராட்சி) மற்றும் எனது புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள நபர்கள் குழுவாக இணைந்து 07.02.2025ஆம் தேதி செயல் அலுவலர் (க. செந்தில்குமார்) அவர்கள் தனது அதிகாரத்தை தவறான முறையில் துஷ்பிரயோகம் செய்து செயல் அலுவலரால் அழைத்து வரப்பட்ட தனி நபர்களுடன் எனது குடியிருப்பு வீட்டு மனையில் அத்துமீறி உள்ளே நுழைந்து (Criminal Trespass) அரசு வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரராகிய எனக்கு சொந்தமான வீட்டுக் குடியிருப்பு மனையில் (கட்டுமானம்) கட்டப்பட்டு வந்த கான்கிரீட் காம்பவுண்ட், சுவர் காலங்களை (பொருட்களை) சேதப்படுத்தியது (Damaging Property) தொடர்பான கிரிமினல் குற்ற சம்பவமாகும். இது சார்ந்து 08.02.2025 மற்றும் 14.02.2025 நாளிட்ட மனுக்கள் ஆவண ஆதாரங்களுடன் உயர்திரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு பதிவு அஞ்சல் வாயிலாக புகார் மனு அனுப்பப்பட்டுள்ளது என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பொருள் 3ல் காணப்பட்டுள்ள பதிலறிக்கையின்படி 'சம்பந்தப்பட்ட துறை மூலம் தீர்த்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி." திரு. க. செந்தில்குமார் (உயர்திரு செயல் அலுவலர், திருப்பனந்தாள் பேரூராட்சி) அவர்கள் மீது உயர்திரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு 14.02.2025 தேதியிட்டு அளிக்கப்பட்டுள்ள அசல் புகார் மனுவை அடிப்படையாகக் கொண்டு உயர்திரு செயல் அலுவலர் (க. செந்தில்குமார்) அவர்கள் மீது உயர்திரு செயலாளர் அவர்கள் (உயர்மிகு முறைமன்ற நடுவர்), தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்கள் முறைமன்ற நடுவம் விதிகளின்படியும், தமிழ்நாடு குடிமைப் பணிகள் (Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules) மற்றும் அரசு ஊழியர் நடத்தை விதிகளின் (Tamil Nadu Government Servent Conduct Rules) கீழ் உரிய விசாரணை செய்து தகுந்த மேல் நடவடிக்கை எடுக்க வேண்டியும் மேலும், கிரிமினல் குற்ற சம்பவத்தால் சேதப்படுத்தப்பட்ட மனுதரராகிய எனக்கு சொந்தமான பொருட்களுக்கு உரிய நிவாரணம் வழங்க ஆவன செய்ய வேண்டியும் தங்களிடம் பணிந்து இந்த புகார் மனு அனுப்பப்படுகிறது என்பதை மிகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

XXX XXX XXX

அய்யா, நான் ஒரு சாமானியன். பணி நிமித்தமாக வெளியூரில் தங்கியுள்ளேன். எனது புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள உயர்திரு செயல் அலுவலர், திருப்பனந்தாள் பேரூராட்சி அவர்கள் மற்றும் உயர்திரு செயல் அலுவலருடன் எனது புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள தனி நபர்களின் கிரிமினல் குற்ற சம்பவங்களால் நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். மிகவும் மனம் உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறேன். இந்த நிலையில் எனது புகார் மனு சார்ந்து சம்பந்தப்பட்ட உயர்திரு செயல் அலுவலர் மற்றும் தனி நபர்களை உரிய விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரரான எனக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டி உயர்திரு செயலாளர், உயர்மிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களை பணிந்து வேண்டுகிறேன் என்பதை தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.11.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 03.12.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 796/2025/அ1ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"திருப்பனந்தாள் பேரூராட்சி பட்டம் குடியானத் தெருவைச் சேர்ந்த திரு. க. சாமிநாதன், த/பெ. இரா. கணேசன் என்பவரிடமிருந்து நாள் 28.11.2024ன்படி வரப்பெற்ற மனுவில் பட்டம் குடியானத் தெரு மாரியம்மன் கோவில் அருகில் சாலை வளைவோரம் உள்ள மின் கம்பத்தை பொது போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நலன் கருதி மாற்றி அமைத்திட கோரியதின் பேரில் இப்பேரூராட்சி செயல் அலுவலரால் நேரடியாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி மின்கம்பத்தால் சாலை போக்குவரத்திற்கு இடையூறு இல்லை என்பது தெரிய வந்தது.

மேலும் இது தொடர்பாக மனுதாரரால் 11.11.2022ன்படி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரப்பட்டதற்கிணங்க, மேற்படி மின்கம்பம் இடமாற்றம் செய்வது தொடர்பாக கிராம பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர்கள் ஆகியோரிடம் கருத்து கேட்கப்பட்டதில் மேற்படி மின்கம்பம் தற்போது இருக்கும் இடத்திலேயே நாற்பது வருடத்திற்கு மேலாக இருந்து வருவதாகவும், மேற்படி மின்கம்பத்தினால் அந்த வழியாக செல்லும் வாகனங்களுக்கும் பொதுமக்களுக்கும் எந்தவித பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை எனவும் மின்கம்பத்தை இடமாற்றம் செய்வதற்கான சாத்தியமான இடம் அருகில் இல்லை. மேலும் மின் கம்பத்தை தற்போது இருக்கும் இடத்திலிருந்து கோவில் பக்கமாகவோ இல்லை சாலை பக்கமாகவோ மாற்றினால் பொதுமக்களாகிய எங்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதால் மின்கம்பத்தினை மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டதன்பேரில், திருப்பனந்தாள் பேரூராட்சி அலுவலக கடித எண். 701/2022/அ1, நாள் 08.12.2022ன்படி மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மனுதாரர் 27.12.2024ஆம் நாளிட்ட தனது கடிதத்தில் அரசு வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் தனக்கு சொந்தமான இடத்தில் சிமெண்ட் 'கான்கிரீட்' சுவர் அமைக்கப் போவதாகத் தெரிவித்துவிட்டு தனது வீட்டை சுற்றி ஏற்கனவே சாலைக்கு இடையூறின்றி அமைத்திருந்த கம்பி வேலியை உட்புறமாக வைத்து பேரூராட்சி சாலையினை ஆக்கிரமித்து புதிதாக சுற்றுச்சுவர் அமைத்திடும் வகையில் பொது சாலையில் பள்ளம் தோண்டி பொது போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வண்ணம் சாலையை சேதப்படுத்தி சிமெண்ட் கான்கிரீட் தூண்கள் அமைக்க சாலையில் பள்ளம் தோண்டும் பணியில் ஈடுபட்டதால் அப்பகுதி பொதுமக்களின் நேரடி புகாரின் பேரில் நேரடியாக சென்று மேற்படி பணியை உடன் நிறுத்திட அறிவுறுத்தப்பட்டும், மேற்படி பணியை தொடர்ந்ததால் திருப்பனந்தாள் பேரூராட்சி நிர்வாகம் சார்பாக 04.02.2025ஆம் தேதி திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் மேற்படி நபர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள புகார் அளிக்கப்பட்டது.

மேற்படி சாலையை ஆக்கிரமித்து போடப்பட்டிருந்த சிமெண்ட் கான்கிரீட் தூண்களால் அந்த சாலை வழியாக செல்லும் பள்ளி வாகனங்களுக்கும், நெல் கொள்முதல் நிலையத்திற்கு செல்லும் சரக்குந்துகளுக்கும் மற்றும் பொதுமக்களது போக்குவரத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டதனால் அப்பகுதி பொதுமக்களால் நேரடி புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் பேரூராட்சி அலுவலக பணியாளர்களைக் கொண்டு பொதுமக்கள் ஒத்துழைப்புடன் பேரூராட்சிக்கு சொந்தமான சாலையில் பள்ளம் தோண்டி பொதுமக்களுக்கும், பொது போக்குவரத்திற்கும் பாதிப்பு எற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்த சிமெண்ட் கான்கிரீட் தூண்கள் 07.02.2025ஆம் தேதி அகற்றப்பட்டு பொது போக்குவரத்திற்கு எந்தவித இடையூறும் ஏற்படாத வண்ணம் வழி ஏற்படுத்தப்பட்டது.

மேலும் திரு. க. சாமிநாதன் த/பெ. கணேசன் என்பவரால் சேதப்படுத்தப்பட்ட சாலையை சீரமைப்பதற்கான கட்டணத் தொகை ரூ.22,500/- (ரூபாய் இருபத்து இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) செலுத்தக் கோரி திருப்பனந்தாள் பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 701/2022/அ1, நாள் 24.02.2025ன்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பட்டம் பொதுமக்கள் சார்பாக 06.02.2025 அன்று வரப்பெற்ற மனுவில் மேற்படி மாரியம்மன் கோவில் முன்புறம் திருக்குளம் அமைந்திருந்ததாகவும், அதனை 1970 முன்பு உள்ள அரசு கிராம வரைபடத்தின்படி அளந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி குளத்தை மீட்டு தருமாறும் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, திருப்பனந்தாள் பேரூராட்சி அலுவலக கடித எண். 07/2025/அ1, நாள் 06.02.2025ன்படி வட்டாட்சியர், திருவிடைமருதூர் அவர்களுக்கு மேற்படி இடத்தினை அளவீடு செய்து சான்று வழங்கிட வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி மனுதாரரிடமிருந்து 17.11.2025ஆம் நாளிட்டு வரப்பெற்ற கடிதத்தில் தனக்கு சொந்தமான நத்தம் குடியிருப்பு வீட்டு மனைகளின் (709/2 மற்றும் 709/5) நான்கெல்லைகளை அளந்து உறுதிபடுத்திட வேண்டி 27.10.2025ஆம் தேதி இணையதளத்தின் மூலம் விண்ணப்பம் செய்யப்பட்டது எனவும், உயர்மிகு நில அளவை துறை (வருவாய்த் துறை) அலுவலர் அவர்கள் நில அளவை செய்ய வருகைப் புரியும் நாளில் புல (709/2 மற்றும் 709/5) எல்லைகளில் உள்ளவர்கள் நில அளவை நடைபெறும் தேதியில் ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மனுதாரர் பேரூராட்சிக்கு சொந்தமான சாலையினை பள்ளம் தோண்டி கான்கிரீட் சுவர் அமைத்திட நடப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் தூண்கள் பள்ளி வாகனங்களுக்கும் நெல் கொள்முதல் நிலையத்திற்கும் செல்லும் சரக்குந்துகளுக்கும் மற்றும் பொதுமக்களது போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்பட்டதை தவிர்த்திட அகற்றப்பட்டது. மனுதாரருடைய இடத்தில் முன்பிருந்த வேலியின் அடித்தளத்தை நாங்கள் ஏதும் செய்யவில்லை. பேரூராட்சிக்கு சொந்தமான தார்சாலையில் பள்ளம் தோண்டி நடப்பட்டிருந்த தூண்களை மட்டும் அப்புறப்படுத்தி அவருடைய இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. மேலும் மேற்படி மனுதாரர் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள செயல் அலுவலர் மற்றும் தனி நபர்களால் அத்துமீறி தனது மனைக்குள் நுழைந்து அவரது உடைமைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தியாக குற்றம் சாற்ற முற்படுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது ஆகும் என்ற விவரத்தினை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. G. சாமிநாதன் மற்றும் எதிர்மனுதாரரான திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 08.01.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. G. சாமிநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 08.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு

உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "திருப்பனந்தாள் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 709/2 மற்றும் 709/5-ல் அமைந்துள்ள எனது குடியிருப்பு மனையில் 07.02.2025 அன்று திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் தனி நபர்களுடன் அத்துமீறி நுழைந்து எனது வருவாய்த் துறையின் ஆவணங்களின்படி வீட்டுக் குடியிருப்பு மனையில் கட்டுமானம் நடைபெற்று வந்த கான்கிரீட் சுவர் காலத்தை சேதப்படுத்தியுள்ளனர். இது குறித்து காவல் துறையில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.
- எனக்கு சொந்தமான புல எண். 709/2 மற்றும் 709/5-ல் 04.12.2017-ல் அரசு வருவாய்த் துறை ஆவணங்களின்படி நில அளவையாளரால் நில அளவை செய்து குடியிருப்பு வீட்டு மனையின் சக்கு பந்திகளை அளவீடு செய்து உறுதி செய்யப்பட்டது. இதனடிப்படையிலேயே 03.02.2025-ல் கான்கிரீட் காம்பவுண்ட் சுவர் அமைக்கப்பட்டது.
- அரசு வருவாய்த் துறை ஆவணங்களின்படி கட்டப்பட்டு வந்த எனது கான்கிரீட் காம்பவுண்ட் சுவரை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் பேரூராட்சி சாலை சார்ந்த ஆவணங்களின் நகலை கோரியும் செயல் அலுவலர் ஆவணங்களின் சார்ந்த தகவல் இல்லை என்று தெரிவித்துள்ளார். (ந.க.எண். 254/2025/அ1 நாள்19.05.2025 மற்றும் ந.க.எண். 348/2025/அ1 நாள் 22.08.2025.)
- எனக்கு சொந்தமான புல எண். 709/2 மற்றும் 709/5-ல் எங்களால் அமைக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் காம்பவுண்டினை அத்துமீறி பேரூராட்சியால் இடிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்காணும் புல எண்களில் அமைந்துள்ள இடமானது எங்களுக்கு சொந்தமானது என்பதை உறுதி செய்திடும் வகையில் நான் 27.10.2025 நாளிட்ட தேதியில் நில அளவை செய்திடுமாறு கோரி வருவாய்த் துறையிடம் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளேன். இத்தகவலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு 17.11.2025 தேதியிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளேன்.
- இந்நிலையில் எனது குடியிருப்பினை விதிமீறி பேரூராட்சி செயல் அலுவலரால் சேதப்படுத்தியதற்கு உரிய நிவாரணம் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலரை 08.01.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகும்படி கோரும் 23.12.2025 நாளிட்ட அழைப்பாணை செயல் அலுவலருக்கு கிடைக்கப் பெறவில்லை என்பதால் 08.01.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை. எனவே எதிர்மனுதாரரான பேரூராட்சி செயல் அலுவலரை 28.01.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.01.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இந்நிலையில் எதிர்மனுதாரரான திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலரின் 24.01.2026 நாளிட்ட கடிதத்தில் நிர்வாக காரணத்தினால் 28.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலாது என தெரிவித்ததை தொடர்ந்து, 10.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.01.2026 நாளிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு நகலிட்டு எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

7. மனுதாரர் திரு. G. சாமிநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "திருப்பனந்தாள் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 709/2 மற்றும் 709/5-ல் அமைந்துள்ள எனது குடியிருப்பு மனையில் 07.02.2025 அன்று திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் தனி நபர்களுடன் அத்துமீறி நுழைந்து எனது வருவாய்த் துறையின் ஆவணங்களின்படி வீட்டுக் குடியிருப்பு மனையில் கட்டுமானம் நடைபெற்று வந்த கான்கிரீட் சுவர் காலத்தை சேதப்படுத்தியுள்ளனர். இது குறித்து காவல் துறையில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

  - எனக்கு சொந்தமான புல எண். 709/2 மற்றும் 709/5-ல் எங்களால் அமைக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் காம்பவுண்டினை அத்துமீறி பேரூராட்சியால் இடிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்காணும் புல எண்களில் அமைந்துள்ள இடமானது எங்களுக்கு சொந்தமானது என்பதை மீண்டும் உறுதி செய்திடும் வகையில் நான் 27.10.2025 நாளிட்ட தேதியில் நில அளவை செய்திடுமாறு கோரி வருவாய்த் துறையிடம் விண்ணப்பம் செய்தேன். வருவாய் துறை மூலம் எனக்கு அனுப்பப்பட்ட குறுஞ்செய்தியில் 04.02.2026 அன்று புலத்தணிக்கை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதால், நிலம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தயார் நிலையில் வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் அடுத்த 10 நிமிடங்களில் மீண்டும் வருவாய்த் துறை மூலம் அனுப்பப்பட்ட குறுஞ் செய்தியில் என்னால் சமர்ப்பித்த புல எல்லை அளவீடு செய்யக் கோரிய மனு எண். (2025/N123/21/010251) மனுதாரருக்கும், பக்கத்து புல உரிமைதாரருடன் தாவா உள்ள காரணத்தினால் நில அளவீடு செய்ய இயலவில்லை என தெரிவித்துள்ளனர்.

  - இருப்பினும், எனக்கு சொந்தமான மேற்காணும் புல எண். 709/2 மற்றும் 709/5-ல் அமைந்துள்ள இடத்தினை அளவீடு செய்திட வருவாய்த் துறையால் தள்ளுபடி செய்யப்பட்ட நில அளவீடு செய்யும் மனுவினை மீண்டும் வருவாய்த் துறையால் பரிசீலித்து அளவீடு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள உள்ளேன் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

8. எதிர்மனுதாரர் திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலர் 10.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

  - ''திருப்பனந்தாள் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 709/2 மற்றும் 709/5-ல் அமைந்துள்ள மனுதாரரின் வீட்டை சுற்றி இருந்த கம்பி வேலியை மனுதாரர் உட்புறமாக வைத்து பேரூராட்சிக்கு சொந்தமான சாலையை ஆக்கிரமித்து சாலையை தோண்டி கான்கீரிட் சுவர் அமைக்க சிமெண்ட் கான்கிரீட் தூண்கள் கட்டப்பட்டதால், அச்சாலையில் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டதை தொடர்ந்து, 07.02.2025 அன்று தூண்கள் அகற்றப்பட்டு, போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாவண்ணம் வழி ஏற்படுத்தப்பட்டது.
  - மனுதாரரால் சேதப்படுத்தப்பட்ட சாலையை சீரமைப்பதற்கான கட்டணத் தொகை ரூ.22,500 செலுத்தும்படி மனுதாரருக்கு 24.02.2025 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

  - மனுதாரர் பேரூராட்சிக்கு சொந்தமான சாலையினை ஆக்கிரமித்து கட்டப்பட்ட கான்கிரீட் சிமெண்ட் போஸ்ட் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரர் கோரிய சாலை வரைபடம் இப்பேரூராட்சியில் கையாளப்படவில்லை. ஆனால் சாலைப் பதிவேடு மட்டுமே பராமரிக்கப்பட்டு வருகிறது.

➢ மனுதாரர் வருவாய்த் துறை மூலம் அவரின் இடத்தினை அளவீடு செய்து வருவாய்த் துறையால் அத்திட்டு மனுதாரருக்கு சொந்தமான இடத்தினை ஊர்ஜிதம் செய்து அளவீடு சான்று தரும் பட்சத்தில், அதன் அடிப்படையில் பேரூராட்சி மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

➢ இருப்பினும், பேரூராட்சிக்கு சொந்தமான சாலையை வருவாய்த் துறை மூலம் அளவீடு செய்ய பேரூராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலங்கள் மற்றும் எதிர்மனுதாரரான திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது 10.11.2025 நாளிட்ட புகார் மனுவில் தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 709/2 மற்றும் 709/5ல் உள்ள தனது குடியிருப்பு மனையில் 07.02.2025 அன்று திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலர் தனி நபர்களுடன் சேர்ந்து அத்துமீறி நுழைந்து, குடியிருப்பு மனையில் கட்டுமானம் நடைபெற்று வந்த கான்கிரீட் சுவர் காலத்தை சேதப்படுத்தியுள்ளனர் என புகாராக தெரிவித்துள்ளார்.

மேற்காணும் புகார் மனு குறித்து, எதிர்மனுதாரரான பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் மேற்படி புல எண். 709/2 மற்றும் 709/5ல், பேரூராட்சிக்கு சொந்தமான சாலையினை ஆக்கிரமித்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் சாலையை தோண்டி கான்கிரீட் தூண்கள் கட்டப்பட்டதால் அவை அகற்றப்பட்டு சாலையை சீரமைப்பதற்கு கட்டணத் தொகை ரூ.22.500 செலுத்துமாறு மனுதாரருக்கு 24.02.2025 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்திருப்பது அறிய வருகிறது.

மேலும், மனுதாரர், பேரூராட்சி செயல் அலுவலரிடம் சாலை வரைபடம் கோரியும், மனுதாரருக்கு அளிக்கப்படாததால், மனுதாரர் வருவாய்த் துறை மூலம் நில அளவீடு செய்திட கோரியதில், 04.02.2026 அன்று புலத் தணிக்கை செய்யப்பட இருந்த நிலையில் மனுதாரருக்கும் பக்கத்து புல உரிமையாளருக்கும் தாவா உள்ள காரணத்தினால் நில அளவீடு செய்ய இயலவில்லை என்பதை வருவாய்த் துறையால் தெரிவிக்கப்பட்டது எனவும், இருப்பினும், பேரூராட்சியினரால் அகற்றப்பட்ட கான்கிரீட் சிமெண்ட் போஸ்ட் உள்ள இடமானது மனுதாரருக்கு சொந்தமானது என்பதை உறுதி செய்திடும் பொருட்டு மீண்டும் வருவாய்த் துறை மூலம் நில அளவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளதை அவரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இவ்வாறு இருக்கையில், மனுதாரர் ஆக்கிரமித்த சாலை பேரூராட்சிக்கு சொந்தமானது என்பதை உறுதி செய்திடும் பொருட்டு வருவாய்த் துறை மூலம் சாலையினை அளவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரரான பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பது அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மனுதாரர் பேரூராட்சி சாலையினை ஆக்கிரமித்து உள்ளதாக எதிர்மனுதாரரான பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ள நிலையில், பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, மேற்படி சாலை பேரூராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளதையும், சாலையில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்பதையும் உறுதி செய்திடும் பொருட்டு வருவாய்த் துறை மூலம் மேற்கண்ட சாலை அமைந்துள்ள இடத்தினை 3 மாத காலத்திற்குள் அளவீடு செய்து அதன் அறிக்கையை பெற்று, அவ்வறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருப்பனந்தாள் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்றம் நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. G. சாமிநாதன்,
14/A, மாரியம்மன் கோயில் தெரு,
35/4 பட்டம் கிராமம், மட்டியூர் அஞ்சல், திருவிடைமருதூர் வட்டம்,
திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டம் - 612 504.

2. செயல் அலுவலர்,
திருப்பனந்தாள் பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/4/26
செயலாளர்
27/4/26